2010 ஏப்ரல் 5]

தெரியும். அமைதியாக இருங்கள். மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு திரு. உ. மதிவாணன்: (குறுக்கீடுகள்) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட அந்தக் குறைபாட்டினை, எந்த இடத்தில், எங்கே என்று குறிப்பிடுவார்களேயானால், அவர்கள்மீது தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தங்கள்மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[**குறிப்பு** : ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. தகவல் கோரல்

உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்

திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

செல்வி கே. பாலபாரதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இன்றைக்கு சிறப்புக் கவன ஈர்ப்பாக... (குறுக்கீடுகள்) முதலில் நான் சொல்வதை எல்லோரும் கேட்டுக்கொள்ளுங்கள். (குறுக்கீடுகள்) நான் சொல்வதைக் கேளுங்கள். தமிழகம் முழுவதும் போலியான மற்றும் காலாவதியான மருந்து விற்பனை செய்தது கண்டுபிடிக்கப்பட்டதால் நோயாளிகள் மற்றும் பொது மக்களிடம் ஏற்பட்டுள்ள நிலை குறித்து சிறப்புக் கவன ஈர்ப்பாக நான் எடுத்துக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்) அதன்மீது... (குறுக்கீடுகள்) நான் சொல்கிறேன். இதைத்தான் எடுப்பதற்கு... (குறுக்கீடுகள்) இதுசம்பந்தமாக நீங்களும் அறிவிப்பு

கொடுத்திருக்கிறீர்கள். (குறுக்கீடுகள்) நீங்களும் கொடுத்திருக்கிற சப்ஜெக்ட்தான் இது.(குறுக்கீடுகள்) சொல்லுங்கள். என்ன ? (குறுக்கீடு) திரு. வேல்முருகன், உட்காருங்கள்.(குறுக்கீடு) உட்காருங்கள் அம்மா.

முற்பகல் 10-50

3. சிறப்புக் கவன ஈர்ப்பு

தமிழகத்தில் நிலவும் மின் வெட்டு

***திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் நாள்தோறும் அதிகரித்து வரும் கடுமையான மின் வெட்டால் தமிழ்நாடு இருளில் மூழ்குகின்ற சூழ்நிலை குறித்து ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் உங்களிடத்தில் கொடுக்கப்பட்டிருக்கிறது. முதலில் அந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தை நீங்கள் ஏற்று, நாட்டிலே நிலவி வருகின்ற மின் வெட்டின் காரணமாக தொழிற்சாலைகள், விவசாயிகள், பொது மக்கள் பெரிதும் பாதிக்கப்படுகின்ற காரணத்தால், இதை முதலில் எடுத்து, இதுபற்றி ஆய்வு செய்து, உடனடியாக அந்தத் துறைக்கு நீங்கள் அறிவுரை வழங்கி, மின் வெட்டே இல்லாத நிலையைத் தமிழகத்திலே நீங்கள் உருவாக்க வேண்டும் என்பதுதான் எங்களுடைய நோக்கம். எனவே, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் இதை முதலிலே எடுத்துக்கொள்ள வேண்டும் என்று வலியுறுத்தி, அமர்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் கொடுத்துள்ள அந்த ஒத்திவைப்புத் தீர்மானம் என்னிடத்தில் இருக்கிறது. பரிசீலனையில் இருக்கிறது. பரிசீலனைக்குப் பின்னர் அது எடுத்துக்கொள்ளப்படும். உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

TRUTH ALONE TRIUMPHS

2. தகவல் கோரல்—தொடர்ச்சி

உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்—தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து, திரு. பீட்டர் அல்போன்ஸ் அவர்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். One by one ஆக எடுப்போம். உட்காருங்கள்.(குறுக்கீடுகள்) திரு. செங்கோட்டையன், எடுக்கிறோம். உட்காருங்கள். (குறுக்கீடுகள்) திரு. பீட்டர் அல்போன்ஸ் அவர்கள். (குறுக்கீடுகள்)

2010 ஏப்ரல் 5]

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே... (குறுக்கீடுகள்)

(அ.இ.அ.தி.மு.க. உறுப்பினர்கள் எழுந்து நின்று கோஷமிட்டனர்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: விடுங்கள். நீங்கள் சொன்னவுடனேயே எடுக்க வேண்டுமா என்ன? (குறுக்கீடுகள்) (குறுக்கீடுகள்) எடுக்கிறோம் என்று சொல்கிறோம், உட்காருங்கள். திரு. செங்கோட்டையன், நான் எடுக்கிறேன். உட்காருங்கள். (குறுக்கீடுகள்) திரு. பீட்டர் அல்போன்ஸ் அவர்கள்.

***திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகம் எங்கும் கடந்த சில நாட்களாக பல்வேறு பெருநகரங்கள் மட்டுமல்லாது, சிறிய நகரங்களில்கூட விற்கப்படுகின்ற மருந்துகளில்...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. பீட்டர் அல்போன்ஸ், அதை இப்போது நாம் எடுக்கப் போகிறோம்.

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்: இப்போது எடுக்கப் போகிறீர்களா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஆம். அதை இப்போது எடுக்கிறோம். உட்காருங்கள். அடுத்து, திரு. வேல்முருகன். (குறுக்கீடு) திரு. ஜி.கே. மணி அவர்கள். ஒரு கட்சிக்கு ஒருவர்தான். திரு. ஜி.கே. மணி அவர்கள்.

திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியத் திருநாட்டைப் பொறுத்தவரையிலே உலக அளவிலே எடுத்துக்கொண்டாலும்கூட, தமிழ்நாட்டுக் காவல் துறைக்கு என்று ஒரு சிறப்புப் பெயர் இருக்கிறது. பாராட்டுக்கள் இருந்துகொண்டு இருக்கின்றன. இந்தச் சூழ்நிலையில், தமிழகக் காவல் துறையில் இருக்கின்ற உயர் அதிகாரிகள் முதல் அடித்தட்டில் இருக்கக்கூடிய காவலர்கள் வரை உள்ள நல்ல அதிகாரிகளை, நல்ல காவலர்களை நான் மனதாரப் பாராட்டுகிறேன்; வாழ்த்துகிறேன். ஆனால் இந்தக் காவல் துறை கடந்த சில மாதங்களாகக் கட்டவிழ்த்து விடப்பட்டு— — காவல் துறை சட்டத்தைக் கையிலே எடுத்துக்கொண்டு நடைமுறைப்படுத்தினால் பரவாயில்லை, ஆனால் காவல் துறை என்பது சட்டத்தை மீறி, வரம்பு மீறி, ஏவல் துறை என்பது மட்டுமல்லாமல், அது அடியாட்களைப்போல... (குறுக்கீடு)

[2010 ஏப்ரல் 5

மாண்புமிகு திரு. துரைமுருகன்: இது Demand-ஆ? அவர்பாட்டுக்கு போலீஸ் இலாகாவைப் பற்றி பேசினால் என்ன அர்த்தம்? ஏதாவது ஒரு பாயிண்டைப் பற்றிப் பேசவேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் எந்த சப்ஜெக்டையும் பொதுவாகப் பேசாதீர்கள். ஏதாவது ஒரு பாயிண்டைப் பற்றிப் பேசுங்கள். உட்காருங்கள். அடுத்து, செல்வி கே. பாலபாரதி பேசுங்கள்.

செல்வி கே. பாலபாரதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு முழுவதும் கடுமையான மின் வெட்டு என்பது தொடர்ந்துகொண்டிருக்கிறது. (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதனை அப்புறம் பார்ப்போம். (குறுக்கீடு)

செல்வி கே. பாலபாரதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு முழுவதும் கடுமையான மின் வெட்டு தொடர்ந்துகொண்டிருக்கிறது என்பதைத் தாங்கள் அறிவீர்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அம்மா, அதை எடுக்கப் போகிறேன். உட்காருங்கள். நீங்கள் சொல்லும் சப்ஜெக்டை எடுக்கப் போகிறேன். இப்போது எடுக்கிறேன். உட்காருங்கள். திரு. சிவபுண்ணியம் அவர்கள்.

திரு. வை. சிவபுண்ணியம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது நீங்கள் இரண்டு கவன ஈர்ப்புத் தீர்மானங்களை எடுத்துக்கொள்வதாக இருக்கிறது. அவற்றில் மிக முக்கியமான ஒன்றாக, தமிழகத்திலே இருக்கின்ற விலைவாசி உயர்வைக் கட்டுப்படுத்தவேண்டும் என்ற கோரிக்கை பரவலாக எல்லா அரசியல் கட்சிகளாலும் வைக்கப்பட்டிருக்கிறது.

அந்தப் பிரச்சினை தீவிரமடைந்துகொண்டு இருக்கிறதே, அதைப் பற்றி இந்த அரசு என்ன கருத்துக் கொண்டிருக்கிறது? அதைப் பற்றி விவாதிக்கவேண்டுமென்று நாங்கள் அறிவிப்புக் கொடுத்திருக்கிறோம். அது எடுத்துக்கொள்ளப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-55

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அது பரிசீலனையில் இருக்கிறது, பார்க்கலாம். (குறுக்கீடு) மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

2010 ஏப்ரல் 5]

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிதிநிலை அறிக்கையின்மீது விவாதம் நடைபெறுகிறபோது, அந்த நாட்களிலே வேறு ஏதாவது முக்கியமான பிரச்சினை இருந்தாலும்கூட, அந்தப் பிரச்சினைகளை நிதிநிலை அறிக்கையின்மீது நடைபெறுகிற விவாதத்திலேயே பேசவேண்டுமென்றுதான் ஒரு மரபு நீண்ட காலமாகக் கடைப்பிடிக்கப்படுகின்றது. அதையும் மீறி ஏதாவது கவன ஈர்ப்புத் தீர்மானம் இருக்குமானால், அதைப் பற்றித் தீர்மானிக்க வேண்டியவர் மாண்புமிகு பேரவைத் தலைவரே தவிர, மாண்புமிகு உறுப்பினர்கள் தாங்கள் சொல்கின்ற காரணத்தாலேயே, அது ஏற்றுக்கொள்ளப்படவேண்டுமென்று கட்டாயப்படுத்துவதில் எந்த நியாயமும் கிடையாது.

மேலும், ஓர் ஆதாரம் இருக்கிறது என்று உறுப்பினர்கள் சொன்னால் மட்டும் போதாது. அந்த ஆதாரம் முன்கூட்டியே பேரவைத் தலைவரிடம் காண்பிக்கப்பட்டு, அதை அவர் ஏற்றுக்கொண்டால்தான் அவையில் அதை ஆதாரம் என்று சொல்லலாமே தவிர, ஆதாரம் என் கையில் இருக்கிறது என்பதற்காக இந்த அவையினுடைய நேரத்தை எடுத்துக்கொண்டு, விவாதிக்கவேண்டுமென்று கேட்கக்கூடாது. ஆகவே நான் பேரவைத் தலைவர் மூலமாகக் கேட்டுக்கொள்வது, நிதிநிலை அறிக்கையின்மீது விவாதம் நடைபெறவிருக்கிறது. எந்தப் பிரச்சினைகளைப் பற்றியும் விவாதிப்பதற்கு உங்களுக்கு உரிமை இருக்கிறது. எனவே, அந்த விவாதத்திலே பேசும்படிக் கேட்டுக்கொள்கிறேன். *(குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. மணி, நீங்கள் ஆதாரம் இருக்கிறது என்று சொன்னீர்கள். அப்புறம் அதைக் கொண்டு வாருங்கள். பிறகு பார்க்கலாம், உட்காருங்கள். *(குறுக்கீடு)* இல்லை, இல்லை. ஆதாரம் இருக்கிறது என்று சொல்லியிருக்கிறீர்கள். என்னுடைய அறைக்கு வாருங்கள். உங்கள் ஆதாரத்தைப் பார்த்துவிட்டுப் பிறகு முடிவு எடுப்போம். மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ. செங்கோட்டையன், உங்கள் சப்ஜெக்டைச் சொல்லுங்கள். *(குறுக்கீடுகள்)* நீங்கள் E.B.-Electricity பிரச்சினை சம்பந்தமாகப் பேசப் போகிறீர்கள் இல்லையா? *(குறுக்கீடுகள்)* சரி, சொல்லுங்கள்.

திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே... *(குறுக்கீடுகள்)*

[2010 ஏப்ரல் 5

(பாட்டாளி மக்கள் கட்சியைச் சார்ந்த உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்றுகொண்டிருந்தனர்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. செங்கோட்டையன், நீங்கள் பேசுங்கள்.

திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்) என்னைப் பேசவிட்டால்தானே? (குறுக்கீடுகள்) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மைக் வேறு யாருக்கும் கொடுக்கப்படவில்லை. திரு. செங்கோட்டையன் அவர்களுக்கு மட்டும்தான் கொடுக்கப்பட்டிருக்கிறது. திரு. செங்கோட்டையன் மட்டும் பேசவேண்டும்.

திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,......... (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய மின் வெட்டு குறித்து மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ. செங்கோட்டையன் அவர்கள் சொல்லுங்கள்.

திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . . (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. மணி, திரு. ஆறுமுகம், திரு. வேல்முருகன், நீங்கள் சொன்ன சப்ஜெக்ட் என்னிடம் வரவில்லை. பிறகு நீங்கள் வாருங்கள். உங்கள் ஆதாரத்தைத் தாருங்கள். உங்கள் ஆதாரத்தைப் பார்த்துவிட்டு, முடியும் என்றால் பரிசீலனை செய்து, நாளை அல்லது நாளை மறுநாள் எடுத்துக்கொள்ள முடியுமா என்று பார்க்கலாம், உட்காருங்கள். (குறுக்கீடு) No. திரு. செங்கோட்டையன், சொல்லுங்கள்.

திரு. கே.ஏ. செங்கோட்டையன்: என்னைப் பேசவிட்டால்தானே? (குறுக்கீடுகள்) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. வேல்முருகன், என்னைக் கட்டாயப்படுத்தாதீர்கள். உட்காருங்கள். திரு. செங்கோட்டையன், நீங்கள் பேசுங்கள். நீங்கள் பேசுகிறீர்களா அல்லது மற்றொரு உறுப்பினரைப் பேசச் சொல்லட்டுமா?

2010 ஏப்ரல் 5]

திரு. கே.ஏ. செங்கோட்டையன்: எப்படிப் பேசுவது? மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே... (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: பேரவைத் தலைவர் அவர்களே, ஓர் உறுப்பினர் zero hour-லே எந்தப் பிரச்சினையை எழுப்ப வேண்டுமென்றாலும், முதலிலே மாண்புமிகு அவைத் தலைவருடைய அனுமதியைப் பெறவேண்டும். Call Attention-ஓ, Adjournment Motion-ஓ எதுவாக இருந்தாலும் கொடுக்கப்பட்டு, "நான் இந்தப் பிரச்சினை பற்றிக் கொடுத்திருக்கிறேன், அது என்னவாயிற்று?" என்று கேட்கலாமே தவிர, அதைவிட்டுவிட்டு, காவல் துறையின் ஆதி, அந்தங்களையெல்லாம் zero hour-லே பேசமுடியாது. Zero hour-ல் பேசுவதற்கு you have to get prior permission from the Hon. Chair. Without the permission of the Chair, you can't straightaway raise any point of order. எந்தச் சட்டத்திலும் இடம் கிடையாது.

முற்பகல் 11-00

3. சிறப்புக் கவன ஈர்ப்பு—தொடர்ச்சி

தமிழ்நாட்டில் நிலவும் மின் வெட்டு—தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர்கள், திரு. ஜி.கே. மணி, திரு. வேல்முருகன், நீங்கள் மின் வெட்டு சம்பந்தமாகவும் கவன ஈர்ப்பு அறிவிப்புக் கொடுத்திருக்கிறீர்கள். அதன்மீது பேசுகிறீர்களா, இல்லையா? (குறுக்கீடு) நீங்கள் பேசுகிறீர்களா, இல்லையா? (குறுக்கீடு) ஒன்றுதான் எடுக்க முடியும். (குறுக்கீடு) நீங்கள் அதைப் பற்றிப் பேசுகிறீர்களா, இல்லையா? (குறுக்கீடு) நீங்கள் போங்கள். (குறுக்கீடு) ஒன்றுதான் எடுக்க முடியும். (குறுக்கீடு) ஒரு கட்சி கொடுப்பதில் ஒன்றுதான் எடுக்க முடியும். நீங்கள் அதிலே பேசுகிறீர்களா, இல்லையா? (குறுக்கீடு) மின் வெட்டு சம்பந்தமாக நீங்கள் பேசுகிறீர்களா, இல்லையா? திரு. மணி. மின் வெட்டு சம்பந்தமாக நீங்கள் பேசுகிறீர்களா, இல்லையா? (குறுக்கீடு) ஒன்றுதான் எடுக்க முடியும் என்று நான் சொல்லிவிட்டேன் அல்லவா? ஒரு கட்சி கொடுப்பதில் ஒன்றுதான் எடுக்க முடியும். மின் வெட்டு சம்பந்தமாக நீங்கள் அறிவிப்புக் கொடுத்திருக்கிறீர்கள். அதில்